# மதுரை வீரன் நாடகம் – ஒரு மீள்பார்வை

**முனைவர் ப.தேவராஜ்**

**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (தன்னாட்சி),**

**பொன்னேரி-601204. rajdevcbe@gmail.com**

**20**

**திறவுச்சொல் :**

அருந்ததியர்-அதியர்

அதியர் – அதியமான் வழி வந்தவர்கள்
பகடை- தமிழ்நாட்டில் உள்ள ஒரு இனக்குழுவின் பெயர்
மதுரை வீரன்- தமிழ்நாட்டு காவல் தெய்வம்

புராணம்- கதைகள்
அம்மானை- சிற்றிலக்கிய வகைப்பாடல்
மாதியன்-சக்கிலியன்

சக்கிலியன்- செம்மான், செருப்புக்குத்திக்குறவன்
செம்மான்-தோல் தொழில் செய்பவன்
செக்கிழுப்பவன்-செக்குலியன்

துடியன்-புலையன், தோல் இசை முழக்குபவன், வேடன்,கோபமுடையவன்,

**ஆய்வுக்கசுருக்கம்:**

இந்திய வரலாற்றில் தவிர்க்கமுடியாத பகுதியாகப் புராணக்கதைகள் விளங்குகின்றன. நால்வருண சாதியக் கட்டமைப்பே இதற்குக் காரணம். சமூக நீதியில்லாப் புராணக்கதைகளின் கட்டுகளே இந்தியரை, தமிழரை ஆட்டிப்படைக்கிறன. இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. வரலாறுகளைச் சுவைக்காகப் புராணக்கதைகளுடன் இணைத்து உண்மைகளைத் திரித்துக் கூறுவது பண்பாடு என மாறிப்போனது. இந்தத் திரிபுகளை உண்மையான வரலாறு என நன்கு படித்த அறிஞர்களும், ஆய்வாளர்களும் சொல்லும் அளவிற்கு, பேசும் அளவிற்கு வரலாறுகள் மாறிப்போனது. அறிவியல் அடிப்படையில் ஆய்வுகள் அமையவேண்டும். மதுரை வீரன் வரலாறு கதைப்பாடலாக, அம்மானைப் பாடலாக, நாடகமாக காணக்கிடைக்கின்றன. ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த ஒருவன்மீது இலக்கியங்கள் தோன்றியிருப்பது தமிழ்மொழியில் மட்டுமே. மதுரை வீரன் கொல்லப்படுகிறான். இந்தத் துன்ப நிகழ்வு மக்களின் மனதில் நீங்கா வடுவாக மாறின. இதனால் மக்கள் போற்றும் தலைவனாக மாறினான். அவனைத் தெய்வமாகப் போற்றினர். ஏன் தெய்வமாக வணங்கப்படுகிறான்? மதுரை வீரனின் வரலாறு கூறும் செய்திகள் யாவை? என்பன போன்ற வினாக்களுடன் மதுரை வீரன் நாடகம் – ஒரு மீள் பார்வை என்னும் தலைப்பில் இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுப்பொருள்**

மதுரை வீரன் நாடகம் - ஒரு மீள் பார்வை என்னும் தலைப்பினை ஆய்வுப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது.

**முதன்மை ஆதாரங்கள்**

மதுரை வீரன் நாடகம் முதன்மை ஆதாரமாகவும், மதுரை வீரன் அம்மானை, மதுரை வீரன் சுவாமி கதைப்பாடல், இராமபய்யன் அம்மானை ஆகியவை துணைமை ஆதாரங்களாகவும் இருக்கின்றன.

**ஆய்வு அணுகுமுறைகள்**

வரலாற்றினை மையமாகக் கொண்டு இலக்கிய வகைமைகளை மீள் வாசிப்பு செய்து, நுட்பமான கூறுகளை வெளியுலகத்திற்குத் தெரியப்படுத்துதல் என்பதற்காக வரலாற்றியல் அணுகுமுறை, ஒப்பியல் அணுகுமுறை, இலக்கிய வகைமையியல் அணுகுமுறை, தலித்திய அணுகுமுறை, பின்னை நவீனத்துவ அணுகுமுறை போன்ற அணுகுமுறைகளுடன் இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது.

**முன்னுரை**

காலத்தைக் காட்டும் கண்ணாடியாக இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்கள் தமிழரின் அகம், புறம் ஆகியவற்றைப் பதிவு செய்வதோடு பண்பாடு, நம்பிக்கைகள், வழிபாடுகள், நீதிகள், மரபுகள் போன்றவற்றையும் பதிவு செய்து காட்டுகின்றன. நாடகம் என்பது தமிழரின் வாழ்வில் நீங்காத இடம் பெற்ற நிகழ்த்துகலை வடிவம். 17-ஆம் நூற்றாண்டில் மதுரைவீரன் என்பவனின் வாழ்க்கையில் நடந்த துன்ப நிகழ்வுகளின் தொகுப்பாக மதுரை வீரன் மீது இலக்கியங்கள் தோன்றியுள்ளன. மதுரைவீரன் வாழ்க்கை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதின் விளைவாக கூத்தாக, நாடகமாக மக்களிடையே புகழ் பெற்று இன்றும் நாடகமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. மதுரை வீரன் வரலாற்றினை மையமாகக் கொண்டு 1938 மற்றும் 1956-ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை திரைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன. மதுரைவீரன் மக்கள் வழிபடும் காவல் தெய்வமாகவும் போற்றப்படுகிறான். நாட்டுப்புற கதைப்பாடல்களில் காணப்பட்ட வரலாறு மதுரை வீரன் நாடகம், மதுரை வீரன் அம்மானை போன்ற இலக்கியங்கள் தோன்ற காரணமாக அமைந்தன. நாடறியும் வரலாறாகவும் மாற்றியது. இதன் அடிப்படையில் மதுரைவீரன் நாடகம் - ஒரு மீள்பார்வை என்ற தலைப்பில் இக்கட்டுரை மதுரை வீரன் வரலாற்றை ஆய்கிறது.

**மதுரை வீரன் வரலாறு பற்றிய படைப்புகள்**

தமிழ் நாடகம் என்பது இரண்டு வகையில் அமைகிறது. அது, “தெய்வத்தொடர்புடைய கலையாகவும், வீரத் தொடர்புடைய கலையாகவும் கருதப்படுகிறது”[1] என ஆறு.அழகப்பனார் கூறும் கூற்றிற்கேற்ப, மதுரை வீரன் வரலாறு இந்த இரண்டு பண்புகளையும் பெற்றதாக இருக்கிறது. “சீர்மேவுந் தென்மதுரை தீரன் முத்து வீரையன் சீர் பார்மேவு நாடகமாய்ப் பாடவுறை”[2] எனத்தொடங்கும் மதுரை வீரன் நாடகம் கி.பி.1890-களில் திரிசிரபுரத்தைச் சார்ந்த குட்டிஉபாத்தியாயர் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. மதுரை வீரன் தொடர்பான முதல் நாடக நூல். முந்நூறு ஆண்டு காலமாகத் தமிழ் மக்கள் அறிந்த வீரனின் உண்மை நிகழ்வுகளின் வரலாற்றுத் தொகுப்பாகப் பல்வேறு நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் மதுரை வீரன் வரலாறு காணப்படுகிறன. “நாட்டுப்புறக் கதைகளிலிருந்து நாட்டுப்புறங்களில் நாடகங்கள் செய்யப்பட்டுள்ளன. கி.பி.17-18-ஆம் நூற்றாண்டுகளில் இம்முயற்சி பெரிதும் கையாளப்பெற்றுள்ளது”[3] எனக் கூறும் கே.ஏ.குணசேகரன் கூற்றின் மூலம் இதனை அறியலாம். “ஒப்பாரிப் பாடல்களில் வாழ்ந்து முடிந்தவர்களின் வாழ்க்கை நிலை, உறவு முறையாளர்களுக்கும், இச்சமூகத்தாருக்கும் அவர்கள் செய்த நல்லவைகள் முக்கியமாகப்

பேசப்படும்."[4] என்னும் நா.வானமாமலையின் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**நாடக வகைகள்**

நாடக வகைகள் "1.தெருக்கூத்து, 2.குழந்தைகள் நாடகம், 3.வானொலி நாடகம், 4.மொழிபெயர்ப்பு நாடகம், 5.மேடை நாடகம், 6.அமெச்சூர் நாடகம், 7.தேசிய நாடகம், 8.ஓரங்க நாடகம், 9.செய்யுள் நாடகம்"[5] போன்ற வகைகளாக இருக்கிறன எனக் கூறும் ஆறு.அழகப்பனாரின் கூற்றிற்கேற்ப மதுரை வீரன் வரலாறு தெருக்கூத்து, மேடை நாடகம், செய்யுள் நாடகம், ஓரங்க நாடகம் போன்ற கூறுகளில் அமைந்துள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தார் மதுரை வீரன் தொடர்பான பல்வேறு இலக்கியங்களைப் பதிப்பு செய்தவற்றைப் பட்டியலிடுகிறது. "1.மதுரை வீரன் சுவாமி கதைப்பாடல் (பதிப்பு-1896), 2.வீரையன் அம்மானை(பதிப்பு-1978), 3.மதுரை வீரன் அம்மானை (பதிப்பு-1987), 4.மதுரை வீரன் சுவாமி கதை, 5.மதுரை வீரன் கூத்து, 6.மதுரைவீரன் நாடகம்(பதிப்பு-1890)" ஆகியவைகளாகும். இதனைப்போலவே கே.ஏ.குணசேகரன் என்னும் நாட்டுப்புற ஆய்வறிஞர் தன்னுடைய 'நாட்டுப்புற கதைகளும் நாடக ஆக்கங்களும்' என்ற தனது நூலில், மதுரை வீரன் தொடர்பான கதைகள் பல்வேறு நாட்டுப்புற கலை இலக்கிய வகைகளாக இருக்கிறது என்பதைப் பட்டியலிட்டுக்காட்டுகிறார். "1.மதுரை வீரன் சுவாமி கதை, 2.மதுரை வீரன் அம்மானை, 3.மதுரை வீரன் உடுக்கடிக் கதைப்பாடல், 4.மதுரை வீரன் கூத்து"[6] ஆகியவைகளாகும். நாட்டார் பாடல் வடிவில் இருக்கும் மதுரை வீரன் தொடர்பான கதைகள் வெவ்வேறு காலத்தில் தோன்றியதாகவும், இடத்திற்கு இடம் வேறு பட்டதாக இருப்பதையும் இந்த நூலில் பதிவு செய்து காட்டுகிறார். ஒரு வரலாறோ அல்லது உண்மை நிகழ்வுகளோ நாட்டுப்புறக்கதை வடிவம் பெறும் போது, கேட்பவர்களின் மனநிலைக்கு ஏற்றாற்போல புராணங்களை உட்புகுத்தி உரைப்பது தமிழகத்தில் பெரும் வழக்கமாக இருக்கின்றன என்பதை இந்தக் கதைப்பாடல்களின் மூலம் உறுதி செய்யலாம்.

**மதுரை வீரன் வரலாறு**

மக்களின் வாய்மொழியாகப் பேசப்பட்டு வந்த கதைகள் மற்றும் நாட்டுப்புறப்பாடல்களில் பொதிந்துள்ள கதைகளின் வழியே வரலாறுகள் மீட்டெடுக்கமுடியும். வீரபாண்டி கட்டபொம்மன் வரலாறு இந்த வகையில் மீட்டெடுக்கப்பட்ட வரலாறாக இன்றும் தமிழ் மண்ணில் இருக்கிறது. மதுரைவீரன் தொடர்பான கதைகள், பாடல்கள், நிகழ்த்து கலைகளான நாடகம் போன்றவற்றின் வழியே மதுரைவீரன் வரலாறு மீட்டெடுக்கப்பட்டுள்ளது எனலாம். மதுரைவீரன் நாடகம் அதில் ஒரு முக்கியத்துவம் பெறுகிறது. மதுரைவீரன் அம்மானை, மதுரைவீரன் சுவாமி கதைப்பாடல் போன்றவைகளும் வரலாறு மீட்டெடுப்பிற்கு துணையாக அமைகின்றன எனலாம்.

**மதுரை வீரன் நாடகம் கூறும் கதை**

தமிழ் மொழியின் சிறப்பே இயல், இசை, நாடகம் என்பதின் அடிப்படையில் இலக்கியங்கள் தோன்றுவதுதான். "இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என, வகைப்படச் சாற்றினர் மதியுணர்ந்தோரே" எனப் பிங்கலம் (1332), கூறுகிறது. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப்படுகிறது. "மனக்கருத்தின் அமைதியே இயற்றமிழ். வாய் ஒலியின் அமைதியே இசைத்தமிழ். மெய்யின் விளக்கமே கூத்துத்தமிழ்"[7] என ஆறு.அழகப்பனார் கூறும் கூற்றிற்கேற்ப மதுரை வீரன்

நாடகம் முதலில் கூத்தாக இருந்து நாடகமாக மலர்ந்துள்ளது. 'மதுரை வீர நாடகம்' இசைநாடக நூலாக கி.பி.1890-ஆம் ஆண்டில் குட்டிஉபாத்தியாயர் என்பரால் இயற்றப்பட்டுள்ளது. நாடகக் கூறுகள் அனைத்தையும் பெற்றுத்திகழும் இந்நாடகம் கூறும் கதையானது காசிராஜன் என்ற அரசனிடமிருந்து தொடங்குகிறது. "காசிராஜனின் மனைவிக்கு வயிற்றில் தலையைக் கொடி சுற்றி ஒரு குழந்தைப் பிறக்கிறது. இக்குழந்தையால் குலத்திற்குப் பாதிப்பு ஏற்படும் என சோதிடம் கூறப்பட்டதால், பிறந்த குழந்தையைக் காட்டில் விட்டு விடுகிறான். அந்தக் காட்டில் விறகு வெட்ட வந்த மாதியச்சின்னான் என்ற சக்கிலியக் குலத்தைச் சார்ந்தவன், குழந்தையின் அழுகுரல் கேட்டு, அக்குழந்தையைத் தன் வீட்டிற்கு எடுத்துச் செல்கிறான். தன் மனைவியான மாதிச்சியிடம் காண்பிக்க, அவள் மகிழ்ச்சி கொள்கிறாள். அக்குழந்தைக்கு வீரய்யன் எனப் பெயர் சூட்டுகின்றனர். வீரய்யனுக்கு வில் பயிற்சி, வாள் பயிற்சி, குதிரை ஏற்றம் போன்ற போர்ப் பயிற்சிகளைக் கற்றுக்கொடுத்து, சிறந்த வீரனாக வளர்க்கின்றனர். திருச்சிராப்பள்ளியின் பாளையப்பட்டு ஒன்றினை ஆட்சி செய்து வந்த பொம்மனநாயக்கன் என்பவரின் படையில் மாதியச்சின்னான் பணியில் சேர்கிறான். பொம்மனநாயக்கனின் மகள் பொம்மி பருவம் அடைந்தால், தனி வீட்டில் வைக்கப்படுகிறாள். காவல் காக்க மாதியச்சின்னான் நியமிக்கப்படுகிறான். ஒரு நாள் தன் தந்தைக்கு மாற்றாக வீரன் காவல் காக்க செல்கிறான். அங்கு பருவம் அடைந்த பொம்மியின் மீது வீரனும், வீரன் மீது பொம்மியும் என இருவரும் மனமொத்து காதல் கொள்கின்றனர். வீரன் தன்னால் காதலிக்கப்பட்ட பொம்மியைக் கைவிடக்கூடாது என்பதினால் திருமணம் செய்து கொள்கிறான். இதனை பொம்மனநாயக்கனும் மற்றும் அவனது படைகளும் எதிர்க்கின்றன. ஆனால் வீரனை வெற்றி கொள்ள முடியவில்லை. இந்த நேரத்தில் மதுரையில் கள்ளர்கள் அச்சம் மிகுந்து விட்டதால் அவர்களை அடக்குவதற்கு தகுந்த ஒரு வீரன் வேண்டும் என மன்னர் திருமலைநாயக்கர் விஜயரங்க சொக்கலிங்கனுக்கு கடிதம் எழுதியதால், பொம்மனநாயக்கன் மாதியச்சின்னானிடம் செய்தியைச் கூறுகிறான். மாதியச்சின்னான் தன்மகன் வீரனை மதுரை செல்லுமாறு பணிக்கிறான். வீரய்யன் தன்னிடமிருந்த பெரும் படையைத் திரட்டிக்கொண்டு மதுரை செல்கிறான். அங்குக் கள்ளர்களை அடக்கி ஒடுக்கி வெற்றி பெற்று மதுரையைக் கள்ளர்கள் அச்சத்திலிருந்து மீட்டெடுக்கிறான். மன்னர் திருமலைநாயக்கரால் பாராட்டவும், வரவேற்கவும் படுகிறான். அங்கு அரண்மனையில் வெள்ளையம்மாள் என்ற ஆடற்கலைப் பெண்ணைக் காதலிக்கிறான். அவளைக் கவர்ந்து செல்ல அரண்மனையில் புகும்போது அப்பெண்ணின்மீது ஆசைகொண்ட படை தளபதிகளின் வீரர்களால் கைது செய்யப்படுகிறான். வீரன் கள்ளர்களோடு கைகோர்த்து களவில் ஈடுபட்டான் என சூழ்ச்சியால் பொய்க்குற்றம் சாட்டப்படுகிறான். மன்னர் வீரனுக்குக் கொலை தண்டனையை வழங்குகிறார். மாறு கை, மாறு கால் வாங்கி கொலை செய்ய ஆணையிடப்படுகிறது. கொலை செய்யப்படுகிறான். இதனை அறிந்த வெள்ளையம்மா, பொம்மியம்மா ஆகியோரும் உடன்கட்டை ஏறுகின்றனர். இறுதியில் மூவரும் தெய்வங்களாக மாறினர் எனக் கதை முடிகிறது."[8]

**மதுரை வீரன் அம்மானை கூறும் கதை**

முன்பத்தியில் சொல்லப்பட்ட மதுரை வீர நாடகத்தில் கூறப்பட்ட வரலாற்றுக் கதையானது, மதுரை வீரன் அம்மானை என்ற இலக்கியத்திலும் சொல்லப்பட்டுள்ளது. இதில் காசிராஜன் என்பவர் யார்? அவர் எந்த நாட்டை ஆட்சி செய்து வந்தார்? என்பன போன்ற செய்திகள் எதுவும் தெளிவாகக்

குறிப்பிடவில்லை. திருமலைநாயக்கர் மதுரையில் கள்ளர்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதால், அதனைக்களைய ஒரு படை தேவைப்படுகிறது என விஜயரங்கசொக்கலிங்கருக்கு கடிதம் எழுதிய செய்தி, விஜயரங்க சொக்கலிங்கர், பொம்மனநாயக்கன் படையில் பணியாற்றும் மாதியச்சின்னான் மதுரைவீரனானை மதுரைக்கு அனுப்புகிறான். மதுரை வீரன் கள்ளர்களை அடக்கி மதுரை நகரின் அச்சம் போக்குதல், வெள்ளையம்மாள் என்ற நடன மங்கையைக் காதல் செய்தல், அரண்மனையிலிருந்து தூக்கிச்செல்ல முற்பட்டபோது அரண்மனைத் தளபதிகளால் படைவீரர்களால் கைது செய்யப்பட்டு கொலை செய்தல்"[9] என மதுரை வீரன் அம்மானைப் பாடலும் கூறுகிறது. வீரன் அம்மானையின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சரசுவதி மகால் நூலகத்தின் மூலம் 15 அம்மானை இலக்கிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. அதில் இராமபய்யன் அம்மானையும் அடங்கும்.

**மதுரைவீரன் பாண்டியர்களுக்குக் கப்பம் கட்டிய சிற்றரசன்**

மதுரைவீரன் வரலாற்றை அறிந்து கொள்ள "மதுரை வீரன் சுவாமி கதைப்பாடல்" துணையாக இருக்கிறது" என அ.பஞ்சநாதன் (மதுரை வீரய்யன் அம்மானை பதிப்புரை-சரசுவதி மகால் நூலகர்-1999) கூறுகிறார். "மதுரைவீரன் பிறவியில் சக்கிலியனாகவே பிறக்கிறான். (காசிராஜாவிற்குப் பிறக்கவில்லை என்பது இதனின் பொருள்) மேலும் இந்த வீரனும், அவனின் முன்னோர்களும் பாண்டியர்களுக்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்த சிற்றரசன் எனவும், பொம்மி என்ற அரசகுமாரியைச் சிறை எடுத்துச்சென்றான். பின்னர் அரண்மனையில் இருந்த ஆடல் கலைப்பெண் வெள்ளையம்மாள் மீது காதல் கொண்ட காரணத்தால் தண்டிக்கப்பட்டான். ஆனால் பொம்மியின் தந்தை வீரனைச் சிறைபிடித்துத் தண்டித்ததாகவும் கூறுவாரும் உளர். மக்கள் அவனைச் சிறு தெய்வமாக வணங்குகின்றனர் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. மதுரை நாயக்கர் காலத்தில் தான் மதுரை வீரன் வழிபாடு தோன்றியது. அக்காலத்தில் மதுரையில் கொலை, கொள்ளை முதலிய தொல்லை கொடுத்து வந்த கள்வர்களைக் கருவறுத்து நன்மை செய்த காரணத்தால் மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவன் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மதுரை வீரனைக் கருப்பசாமி என்று அழைப்பதும் உண்டு. ஐயனார் கோயில், அம்மன் கோயில்களில் சிறு தெய்வமாக வணங்கப்படும் மதுரைவீரனுக்குத் தனிக்கோயில் இல்லை. சில இடங்களில் மதுரைவீரன் "பதினெட்டாம்படி கருப்பன்" என்று அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது. தஞ்சை மாவட்டத்தில் பல ஊர்களில் ஐயனார் கோவில்களில் மதுரைவீரனுக்குத் தனிக்கோயில் உள்ளன. தலையில் கொண்டை, கனத்த மீசை, கட்டான உடல்வாகு கொண்டு வலக்கையில் வாள், இடக்கையில் கதை, அவனுக்கு முன்பாக ஒரு வேட்டை நாய், எதிரில் மண்ணால் செய்த சிறிய பெரிய குதிரைகள்"[10] என மதுரைவீரன் கதைப்பாடலை ஆய்ந்த தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் முன்னாள் நூலகர் திரு.ம.சிராளன் என்பவர் மதுரைவீரன் அம்மானை பதிப்பு உரையில் கூறுகிறார். இதன்மூலம் வீரன் என்பவன் தமிழகத்தில் பாண்டியர்களின் கீழ் இருந்த ஒரு பகுதியை ஆண்ட சிற்றரசன் என்பது தெரிய வருகிறது.

**இராமபைய்யன் அம்மானை தரும் செய்தி**

திருமலை நாயக்கரின் சமகாலத்தில் இராமபைய்யன் அம்மானை அல்லது இராமய்யன் அம்மானை தோன்றியது. “இந்நூல் மதுரையை ஆண்ட நாயக்கர்களுக்கும், இராமநாதபுரத்தை ஆண்ட தேவர்களுக்கும் 17-நூற்றாண்டின் முற்பகுதியில் அடிக்கடி நடந்த சில்லரைப் போர்களின் ஒன்றின் வரலாற்றைக் கூறுவது. இராமபைய்யன் என்பவன் ஒரு பிராமண அந்தணன். திருமலை நாயக்கரிடம் தளவாயாக இருந்தவன்”[10] என சி.எம்.இராமச்சந்திர செட்டியார் கூறுகிறார். இந்த இராமபைய்யன் அம்மானையில் மதுரைவீரனின் வரலாறோ, வாழ்க்கை நிகழ்வுகளோ சொல்லப்படவில்லை. ஆனால் அவனது தந்தை மாதியச்சின்னான் பாளைப்பட்டுகளுக்கு படை திரட்டி உதவிய செய்தி கூறப்பட்டுள்ளது. “….கழுகு படையான கத்திப்படை காவலாளும், வென்னாயக்கனும் உற்ற புகழ் காலாளும், போருக்கதிகாரி பொம்மனாயக்கன் படையும்,…..நல்ல சிறு பொம்மணானும்,…….பள்ளியில் சின்னையனும் பார்வேந்தன் தன்படையும்…..”(இராமபைய்யன் அம்மானை-பக்-31, சரசுவதி மகால் வெளியிடு) என வரும் பாடலடியில் பொம்மான நாயக்கன் மற்றும் அவன் படையில் இருந்த சின்னையன் ஆகியோர் பெயர்கள் இடம் பெற்றுள்ளது.

“துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை“ என கூறப்படுவதில் துடியன் என்பது செம்மான் எனப்படுபவர்களைக் குறிக்கும் சொல், செம்மான் என்றால் பறம்பர்களைக் குறிப்பிடும் சொல் என தேவநேயப்பாவாணர் –தமிழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகிறார். துடியன் சார்ந்த படைகள் இராமபைய்யனின் படையில் இடம் பெற்றிருந்தது என இராமபைய்யன் அம்மானையும் இதனைப் பதிவு செய்திருக்கிறது. “துடியன் நாயினன் தோற்செருப்பு ஆர்த்த பேர் அடியன் அல செறிந்தன்ன நிறத்தினான்…”(கம்ப-குகைப்படலம்) எனக் கம்பராமாயணமும் இதனைச் சான்றுரைக்கிறது.

**இராமபைய்யன் அம்மானையும், மதுரை வீரையன் அம்மானையும்**

இராமபைய்யன் அம்மானை மதுரை வீரன் காலத்திற்கு முன்பு தோன்றிய இலக்கியமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. இராமபைய்யன் அம்மானைப் பாடலில் தளவாய் இராமபைய்யன் என்ற அந்தணர் குலத்தைச் சேர்ந்த படைதளபதி இராமநாதபுரம் சேதுபதியையும், மறவர்களையும் அழிப்பதற்கு பெரும் படையைத் திரட்டிச் சென்றான் எனப்பாடுகிறது. இதில் திருமலைநாயக்கருக்கு உதவிய பாளையப்பட்டு படைகளின் பெயர்கள் வரிசையாகச் சொல்லப்படுகின்றன. கணக்கில் அடங்காப் படைகள் நாயக்கராட்சியின் மாண்பினைப் புகழினைக் கூறுகிறது. கணக்கில் சொல்ல முடியாத அளவில் காணப்படும் படைகளை எதிர்ப்பார் யாரும் இல்லை. ஆனால் இராமநாதபுரத்தை ஆட்சி செய்துவந்த சேதுபதி எதிர்த்தான். அவனை அடக்கவே இந்த படைகள் வீறுகொண்டு எழுந்தது என இராமபைய்யன் அம்மானை பாடுகிறது.

அடக்க முடியாத கள்ளர்களை மதுரை வீரன் அடக்கினான், அதனால் திருமலை நாயக்கரின் பாராட்டினையும், முதல் மரியாதையையும் பெற்றான் என மதுரை வீரன் அம்மானைப் பாடுகிறது. இதன் மூலம் மதுரை விரனின் பலமும், பாராக்கிரமும், அவனின் கம்பீரமும் இன்னது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

இராமபைய்யன் அம்மானையில் குறிப்பிடப்படும், படைகளின் வரிசையில் பொம்மனநாயக்கன் படையும், அவனது படையில் இருந்த மாதியச்சின்னானின் படையும் இடம்

பெற்றிருந்தன எனப் பாடுகிறது. இதனைக் கொண்டு மதுரை வீரன் கதை நிகழ்வுக்கு முன்னதாகவே இராமபைய்யன் அம்மானை தோன்றியிருக்கலாம் என முடிவு செய்யலாம். திருமலை நாயக்கர் இந்த இரண்டு அம்மானைப் பாடல்களிலும் இடம் பெறுகிறார். இராமபைய்யன் அம்மானை வரலாற்று ஆவணமாக எடுத்துக்கொள்ளும் போது தமிழ் கூறும் நல்லுலகம், மதுரை வீரன் அம்மானையைப் புறக்கணித்திருப்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

மேலும் "மதுரை, திருச்சி பாளைப்பட்டுகளில் வீரர்களாக இருந்தவர்களில் பெரும்பாண்மையோர் சக்கிலியர்களே. இவர்கள் பகடைகள் எனப்பட்டனர்"[11] எனக்கூறப்படுதில் பகடைகள் என்போர் காலங்காலமாகப் படைவீரர்களாக பல்வேறு பெயர்களில் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இச்செய்தியினை நாட்டுப்புற ஆய்வறிஞர் கே.ஏ.குணசேகரன் "மணப்பாறை, நத்தம் போன்ற பெரிய பாளைப்பட்டுகள் உள்ள ஊர்களின் வழியே மதுரை செல்லும் வீரனுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தாகவும், கள்ளர்களை அடக்கி ஒடுக்கியதால் மாமன்னர் திருமலை நாயக்கரால் வரவேற்பும் பெருகிறான்."[12] என மதுரை வீரன் அம்மானையை மேற்கோளாகக் காட்டி உரைக்கிறார். இதன்மூலம் மதுரைவீரனின் உண்மை வரலாற்றினை நாம் உணரலாம்.

"வீரன் மதுரையில் இருந்த போது அரசனின் மகள் வெள்ளையம்மாள் என்ற பருவ மங்கையின் மீது காதல் கொள்கிறான். அவளைத் திருமணம் செய்து கொள்ளவதில் ஏற்பட்ட போரில், வீரன் ஒரு திருடன் என சூழ்ச்சியால் மன்னர் திருமலை நாயக்கரை நம்பச்செய்து மன்னனின் ஆணையால் மாறு கை, மாறு கால் என வெட்டப்பட்டு வீழ்த்தப்பட்டுக் கொல்லப்படுகிறான். வெள்ளையம்மாள் வீரனுடன் உடன்கட்டை ஏறினாள். இதனை அறிந்த பொம்மியும் உடன்கட்டை ஏறினாள். உண்மை அறிந்த மன்னன் வருந்தினான்."[13] இதனைத் தமிழகத்தில் நடந்தேறிய ஆணவக்கொலையின் முதன் நிகழ்வாகவும் பதிவு செய்கிறார். "நா.வானமாமலை, கே.ஏ.குணசேகரன், ஆறு.இராமநாதன் போன்றோர் இதனைக் கொலை மற்றும் தற்கொலையில் முடிந்த வரலாற்றுக்கதைகள்"[14] என்கின்றனர். இன்றும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வாசலில் மதுரை வீரனின் தெய்வச்சிலை உள்ளது.

**குட்டிஉபாத்தியாயர் எழுதிய மதுரை வீர நாடகம் நூல்**

மதுரைவீரன் நாடகத்தை முதன் முதலில் எழுதியவர் குட்டிஉபாத்தியாயர் என்ற பிராமணர். 1890-களில் எழுதப்பட்டதாக தெரிய வருகிறது. இவர் எழுதிய நாடக நூலைப் பிழைத் திருத்தம் செய்து தந்தவர் திருச்சி மாதர் பூதீஸ்வரர் சுவாமிகள் என்ற மடத்தலைவர். இந்த நூல் திருச்சி சபாபதிபிள்ளை அவர்களின் ஸ்ரீ மட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடத்தில் அச்சேற்றப்பட்டது போன்ற செய்திகளை இந்நூலின் முதற்பகுதியில் காணமுடிகிறது. இந்நூல் தமிழ் இணையக் கல்விக்கழகம் இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. தமிழ் எழுத்துகளின் வடிவத்தைப் பார்க்கிறபோது இது கி.பி.1890-களில் எழுதப்பட்டிருக்கலாம் என கருதலாம். தமிழ் இணையக்கல்விக்கழகம் இணைத்தில் பதிவேற்றம் செய்துள்ள புத்தகத்தின் முகப்பின் விஷீ ஆண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது.

16-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் புராணக்கதைகள் என்ற புதிய இலக்கிய வகை தோன்றி வளர்ந்தது. சமணர்கள் காலம், பௌத்தர்கள் காலம் போன்ற காலத்தில் தோன்றிய கண்ணகி-கோவலன்கதை, மணிமேகலை கதை உள்ளடக்கிய ஐம்பெருங்காப்பியங்களிலும், ஐஞ்சிறுகாப்பியங்களிலும் இந்தப் புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன என்பதை வைத்துப்பார்க்கும்

போது, புராணங்கள் தமிழ் இலக்கியத்திலிருந்து பிரிக்க முடியாத ஒரு வடிவ உத்தி எனக் கூறலாம். புராணங்கள் பொதுவாக கேட்போர்களுக்கு சலிப்பில்லாமல் இருப்பதற்காக உட்புகுத்தப்பட்ட உத்தி எனலாம். தமிழகத்தில் காணப்படும் கோவில்களின் தல வரலாறுகள் அனைத்தும் புராணங்களின் அடிப்படையிலே அமைந்துள்ளன. தமிழகத்தில் உள்ள சாதிகள் அனைத்தும் தங்களை ஏதோ ஒரு புராணத்தின் அடிப்படையில் தோன்றியதாகவே கூறிக்கொள்கின்றனர்.

**மதுரைவீரன் வீழ்ச்சியும், அதியர் குடி தாழ்ச்சியும்**

மதுரை வீரன் வீழ்ந்ததற்குப் பிறகு அவன் சார்ந்த சக்கிலிய இனமும் மக்களும் வீழ்ச்சியடைந்தனர். "திருமலை நாயக்கரின் படைகளிலும், பாளையப்பட்டுகளிலும் பகடைகள், கம்பளத்தார்கள், மல்லர்கள், வன்னியர்கள் போன்றோர்களே போர்ப்படை வீரர்களாகக் இருந்தனர்."[15] என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "படைக(படைகள்) என்ற பேச்சு வழக்கின் சொல் மருவி பகடை என மாறியது"[16] என எழில்.இளங்கோவன் போன்றோர் கூறுகின்றனர்.

"மாதியர் என்பவர்கள் கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் குலத்தைச் சேர்ந்தவர்கள்"[17] என எழில்.இளங்கோவன் கூறுகிறார். சங்க இலக்கியத்திலும் அதன் பின்பு தோன்றிய இலக்கியங்களிலும் மாதியர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் விரவி கிடக்கின்றன. செக்கிழுக்கும் பணி செய்ததால் செக்குலி என்ற காரணப்பெயரும்(ஜெயகொண்டார்-இசையாயிரம் நூல்), தோல் தொழில் செய்ததினால் துன்னர் (சிலப்பதிகாரம்-புகார் காண்டம்-இந்திர விழாவெடுத்த காதை) என்ற பெயரும் இவர்களுக்கு ஏற்பட்டது. எட்கார் தர்ட்சன் தென்னிந்திய குலங்களும் குடிகளும் என்ற இனவரைவியல் தொகுப்பில் செருப்புக்குத்திக்குறவர் என்போர் தமிழ் பேசும் சக்கிலியர் எனப் பதிவு செய்தும் காட்டுகிறார். எனவே அருந்ததியர் என அழைக்கப்படும் இவ்வினத்தவர்கள் 17-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் மதிப்பு மிக்க இன மக்களாகவும், படைதளபதிகள், போர் வீரர்கள் என இனக்குழுவினராக, குறுநிலத் தலைவர்களாக இருந்துள்ளனர் என்பதை இதன் மூலம் அறியலாம். இதனைச் சங்க இலக்கியங்களும் அதன் பின்பு தோன்றி இலக்கியங்களும் பதிவு செய்து காட்டுகிறது. இத்தகையப் பண்புகள் கொண்ட இனக்குழுவினர் மதுரை வீரன் மதுரையில் கொல்லப்பட்ட பிறகு வீழ்ச்சிக்கு ஆழானது. "போர்கள் இல்லாதபோதும், அரண்மனைகளில் வேற்று சமூகத்தாரின் ஆதிக்கம் நிறைந்ததாலும் பகடைகள் வேறு வழியில்லாமல் அடிமைத் தொழில் செய்ய நேரிட்டது" என சு. வெங்கடேசன் தன் வேள்பாரி புதினத்தில் பதிவு செய்து காட்டுகிறார். ஆகவே அதியர் அல்லது மாதியர்கள் மதுரை வீரனின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிறிது சிறிதாக அடக்குமுறைக்கு ஆளாகி, அடிமைகளாக, கேட்பாரற்ற மக்களாக மாற்றப்பட்டனர். செத்த மாட்டிறைச்சி உண்பவர்களாக, நகரின் புறத்தே வாழ்பவர்களாக, நிலமற்றவர்களாக, தீண்டப்படாதவர்களாக, வேளாண் கூலி ஆட்களாக, பெரிய வீடுகளில் ஏவல் ஆட்களாக மாற்றப்பட்டனர் என்பது புலனாகிறது. அதாவது பிழிப்பிற்கு வேறு வழியில்லை என்பது இதன் பொருள். மதுரை வீரன் போன்ற ஒரு வீரன் தன் குலத்தில் பிறப்பான், அவன் தன்னினத்திற்கு விடுதலையைப் பெற்றுத் தருவான் என்ற அடிப்படையில் மதுரை வீரன் வழிபாடுகள் அமைந்துள்ளதாக முனைவர் தே.ஞானசேகரன் அவர்கள் பதிவு செய்து காட்டுகிறார்.

"மதுரை வீரன் கொலை செய்யப்பட்டான். அவனுடன் பொம்மியம்மாள்,வெள்ளையம்மாள் ஆகிய பெண்களும் உடன் கட்டை ஏறினர் ஆகிய துன்ப நிகழ்வுகளைத் தங்களின் மனதில் நினைத்த

மாத்திரத்தில் மக்களின் மனதில் தோன்றிய புலம்பல்களே மதுரைவீரன் கதைப்பாடல்”[18] என்று நா.வானமாமலை கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

காத்தவராயன் கதைப்பாடல், தேசிங்குராஜா கதைப்பாடல், இராமப்பையன்அம்மானை, நல்லதங்காள் கதைப்பாடல், கட்டமொம்மு கதைப்பாடல் போன்ற வரிசையில் முதலில் நிற்பது மதுரைவீரன் கதைப்பாடல்களாகும். மதுரை வீரனின் வீழ்ச்சியினால் துன்ப நிகழ்வுகளைக் கொண்ட கூத்தாக, நாடகமாக இன்றும் நாடகமாக நடத்தப்படுகிறது. (வலையொளியில் காணலாம்)

**மதுரை வீரன் வரலாற்றுத் திரைப்படங்கள்**

மதுரைவீரன் நாடகம், கதைப்பாடல்கள், அம்மானைப் பாடல்கள், கும்பிப்பாட்டு, குலவைப்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு, உடுக்கை அடிப்பாட்டு போன்ற இன்னும் பிற வடிவத்தில் காணலாகும் மதுரைவீரன் கதைகள் வரிசையில் மதுரை வீரன் வரலாறுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு, அது திரைப்படமாக, அதுவும் இரண்டு முறை திரை காவியமாக எடுக்கப்பட்டன. மதுரை வீரனின் வீழ்ச்சி ஏற்படுத்திய தாக்கம் உண்மையில் தமிழர்களைப் பாதித்த வரலாறாகவே மாறியிருந்தது. 1931-இல் முதல் பேசும் படம் காளிதாஸ் என்ற திரைப்படம் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து தியாகபூமி, மாத்ருபூமி போன்ற தேசப்பற்று திரைப்படங்களும் வேறு சில திரைப்படங்களும் வெளிவந்தன. 1939-இல் மதுரை வீரன் வரலாறு திரைப்படமாக எடுக்கப்பட்டது. இதனை இயக்கியவர் டி.பி.இராலட்சுமி என்பவர். இவர்தான் தமிழின் முதல் பெண் இயக்குநர். முதல் தமிழ்த்திரைப்பட பெண் நடிகை. இத்திரைப்படம் எடுப்பதற்கான காரணம் மக்களின் மனதில் நீங்காத வடுவாக, நீக்கமற நிறைந்த மதுரை வீரனின் காதல் மற்றும் அவனது வீரதீர செயல்கள் எனலாம். 1939-இல் இந்தத் திரைப்படம் எடுக்கும் போது சக்கிலியர்களின் வாழ்வியலின் நிகழ்வுகள் கேள்விக்குறியாகியிருந்த காலம். நீதியற்ற காலமாக, பிராமண-ஆரிய-நால்வருண-மனுதர்ம காலமானதால் அதியர்கள் மிகவும் ஒடுக்கு முறைக்கு ஆளாகியிருந்தனர். கீழ்மையான தொழில்கள் செய்ய கட்டாப்படுத்தப்படிருந்தனர்.

பெரியாரின் சமத்துவமும், அம்பேத்காரின் எழுச்சியும், நீதி கட்சியின் ஆட்சியும் 1921-களில் மாதியர், மாதிகா, பகடை, செம்மான், தோட்டி, சக்கிலி,கோசங்கி போன்ற பெயர்கள் அனைத்தும் இனி அருந்ததியர் என அழைக்க வேண்டும் என நீதிகட்சி அன்றைய சென்னை மாகாணத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. பெரியாரின் வைக்கம் போரட்டம், ஒடுக்கப்பட்டவர்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற சமூகநீதி, கல்வியில்-வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு, கோயில் நுழைவுப் போராட்டம் போன்ற திருப்பங்களை, மாறுதல்களைப் பெற்று வந்த காலம். மேலும் ஆங்கிலேய அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலம். இந்தக் காலத்தில் மதுரை வீரன் தொடர்பான திரைப்படம் எடுத்திருப்பதில் வியப்பேதுமில்லை.

நாடகம் என்றாலே மதுரை. நாடகத்தின் தாயகம் மதுரை. அந்த மண்ணில் நிகழ்ந்த துன்ப நிகழ்வுகளின் கதைக்களம் என்பதினாலும், மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்ததாலும், வீரம், தீரம், காதல், போர், வெற்றி, இன்ப-துன்ப நிகழ்வுகள் என பல்சுவை கொண்ட அனைத்து அம்சங்களும் கூடிய நிறைந்த ஒரு கதையாக மதுரை வீரன் வரலாறு காணப்படுகிறது. தமிழரின் அக இலக்கியங்களில் கூறப்படும் களவு, கற்பு போன்ற அக வாழ்க்கையின் முழுமைப் பொருளைத்

தாங்கியதாக மதுரை வீரன் கதை அமைந்திருக்கிறது. அதனால் 1956-இல் மீண்டும் மதுரை வீரன் வரலாற்றை மையமாகக் கொண்டு திரைப்படமாக எடுக்கப்பட்டது.

எம்.ஜி.இராமச்சந்திரன் படத்தின் கதாநாயகனாக வலம் வந்தார். பானுமதி மற்றும் பலர் நடித்தனர். கண்ணதாசன் திரைக்கதை மற்றும் பாடல்கள் எழுதினார். தமிழர்களின் அகம் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகள் இக்கதையில் இயற்கையாகவே இருந்தது.

**தமிழரின் அக வாழ்க்கை**

தமிழர்கள் "மனிதர்களின் உலகியல் பண்பினை அகம், புறம் என இரண்டாகப் பிரித்தனர். அகத்திணையைக் களவு, கற்பு என்று இரு வகையாகப் பகுக்கப்பட்டு இலக்கணம் சொல்லப்பட்டது. களவென்பது ஊழ் வினையின் காரணமாய்த் தலைவன் தலைவி இருவரும் ஒருவருக்கு ஒருவர் பார்த்தவுடன் அன்பினராதலாகும். இதனைக் காந்தவர் மணம் எனத் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகிறது. இந்த நிகழ்வு மதுரை வீரன் தன் தந்தைக்கு மாற்றாக காவல் காக்க சென்ற போது, பொம்மி என்ற பருவம் அடைந்த சில நாட்களே ஆன பெண்ணுடன் காதல் கொள்கிறான். அந்தப் பெண்ணும் அன்பில் திளைத்ததினால்,இருவரும் இணைந்தனர். "யாயும் ஞாயும் யாரோகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், யானும் நீயும் எவ்வழி அறிதும், செம்புலப் பெயல் நீர் போல, அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"[19] இது மதுரை வீரனுக்கும் பொம்மிக்கும் பொருத்தமானதாக அமைந்தது. திரைப்படத்தில் காட்சிப்படுத்த களவு வாழ்க்கையும், தந்தையை எதிர்த்து உடன்போக்கு செல்வதும், திருமணம் செய்து கொள்வதும், போருக்காகத் தலைவன் பிரிந்து செல்வதும் போன்ற நிகழ்வுகள் மிகவும் சிறப்பானதாக அமைந்ததால் மீண்டும் திரைப்படமாக எடுக்கப்பட்டது. களவு நெறியும், கற்பு நெறியும் மக்கள் பேசுகிற வழக்காக இருந்ததால் மதுரை வீரன் நாடகம் மட்டுமின்றி திரைப்படமும் மக்களுக்குப் பிடித்தமான படைப்புகளாக மாறியது.

**பட்டினப்பாலை பாடல் சான்று**

"நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும் கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை பொற்கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் முக்கால் சிறு தேர் முன் வழி விலக்கும்" (பட்டினப்பாலை-20-24) எனவரும் பட்டினப்பாலை பாடல் அடிகளில் "பெரிய வீட்டின் முன்பு நெல்மணிகளைக் காயவைத்த மகளிர்கள், அதனைக் கொத்தித்திங்க வரும் பறவைகளை விரட்ட தாங்கள் அணிந்திருந்த பொன்னால் ஆனா காதணிகளைக் கழற்றி எறிந்தனர் என உருத்திரங்கண்ணனார் பாடுகிறார். நெல் மணிகளைக் கொத்தித்திங்க வரும் பறவைகளை ஓட்டுவதற்கு தங்க காதணிகளை எவ்வாறு கழற்றி வீசுவர். இது உண்மைக்கு மாறாக மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது என்பதையும் இலக்கியச் சுவைக்காகக் கூறப்பட்டுள்ளது என்பதையும் படிக்கும் யாவரும் உணரலாம். ஆனால் பெரிய வீடு, நெற்மணிகளை உலர வைத்தல், வேளாண்தொழில் மூலம் நெல் விளைவித்தல், சிறுவர்கள் விளையாடுதல், மகளிர் காவல் காத்தல் போன்றவைகள் உண்மை நிகழ்கள் பட்டினப்பாலையில் பதிவு செய்திருப்பதை யாராலும் மறுக்க முடியாது. அதனைப் போலவே, மதுரைவீரன் நாடகம் அல்லது மதுரை வீரன் அம்மானை அல்லது மதுரை வீரன் கதைப்பாடல்கள் போன்றவற்றில் சொல்லப்பட்ட புராணக்கதைகளை நீக்கிப்பார்த்தால், மதுரை வீரன் மற்றும் அவன் சார்ந்த அதியர் குல மக்களின் வரலாற்றின் உண்மையை அறிந்துகொள்ளலாம்.

**முடிவுரை**

ஒரு புள்ளின்மீது விழுந்துகிடக்கும் சிறு பனித்துளி, இந்தப் பிரபஞ்சத்தை உள்ளடக்கிக் காட்டும். அதனைப் போல நாட்டார் கதைப்பாடல்கள் ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றின் பின்புலத்தைப் பெற்றிருக்கும் என்பதற்குச் சான்றாக மதுரைவீரன் நாடகம் மற்றும் மதுரை வீரன் அம்மானை போன்ற இலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை இவ்வாய்வின் மூலம் ஆய்ந்து உரைக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. ஆறு.அழகப்பன்-தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், பக்-10
2. குட்டி உபாத்தியார் – மதுரை வீர நாடகம்- முன்னுரை(1890)
3. கே.ஏ.குணசேகரன்-நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும், முன்னுரை (உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்-2002)
4. நா.வானமாமலை- தமிழர் நாட்டுப்பாடல்கள், பக்-31
5. ஆறு.அழகப்பன்-தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், பக்-10
6. கே.ஏ.குணசேகரன்-நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும், முன்னுரை (உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்-2002), பக்-7
7. ஆறு.அழகப்பன்-தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், பக்-4
8. குட்டி உபாத்தியார் – மதுரை வீர நாடகம் (1890)
9. மதுரை வீரன் அம்மானை- தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு-1999
10. சி.எம்.இராமச்சந்திர செட்டியார்-இராமபைய்யன் அம்மானை- பதிப்புரை
11. சு.வெங்கடேசன்-வேள்பாரி நாவல்
12. கே.ஏ.குணசேகரன்-நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும், முன்னுரை (உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்-2002), பக்-7
13. மேலது, பக்-15
14. மேலது, பக்-20
15. எழில்.இளங்கோவன்- அருந்ததியர் வரலாறு வினாவும் விடையும், பக்-15
16. மேலது, பக்-10
17. மேலது, பக்-11
18. நா.வானமாமலை- தமிழர் நாட்டுப்பாடல்கள், பக்-72
19. குறுந்தொகை –பாடல்-40

**துணை நூற்பட்டியல்**

1.மதுரை வீரன் நாடகம் – குட்டி உபாத்தியாயர்-1890

2.மதுரை வீரன் அம்மானை- தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு-1999

3.தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும்-ஆறு.அழகப்பன்

4.இராமபய்யன் அம்மானை- இராமபய்யன்-சரசுவதி மகால் வெளியீடு
5. நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்- முனைவர் கே.ஏ.குணசேகரன்